6th September 1960]

(ஆ) அப்படியானால், அதன்மீது அரசாங்கம் இதுவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI P. KAKKAN : (அ) Yes Sir.

(ஆ) On examination, it has been found that sluices Nos. 17 and 18 of the Amaravathi Main Canal were completed during the year 1958–59 and that water was being let in through the branch channels from 1959.

Prices

* 476 Q.—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விலைவாசிகளை ஸ்திரப்படுத்துவது சம்பந்தமாக பொதுக் கொள்கையை உருவாக்கும் பொறுப்பை ராஜ்ஜிய முதன் மந்திரிகளிடம் விட்டுவிட 1960-ம் வருடம் மார்ச் மீ 20-ம் தேதி டெல்லியில் நடைபெற்ற தேசீய அபிவிருத்திக் கவுன்ஸில் தீர்மானத்தின் பேரில் சென்னை சர்க்கார் திட்டக் கமிஷனுக்கு என்னென்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : The National Development Council at its meeting held on the 19th and 20th March requested the Chief Ministers of States to forward their suggestions relating to price policy for the Third Plan for consideration at the meeting of the National Development Council to be held on 17th April. The suggestions of the State Governments are now under consideration of a High Level Committee set up by the National Development Council. It is not in the public interest to divulge the nature of the suggestions made by the Government.

SRI P. G. MANICKAM : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி அந்த ஹைலெவல் கமிட்டியில் யார் யார் அங்கத்தினர்களாய் இருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Some of the members of the Planning Commission, some of the Chief Ministers of States and some of the Finance Ministers of States.

SRI N. R. THIAGARAJAN : ஸார், இந்த விலைவாசிகளை சீர்படுத்தும்பொழுது, கிராமங்களிலுள்ள விவசாயிகள், தங்களுக்கு அரிசியினுடைய விலை, பருப்பினுடைய விலை, புளியினுடைய விலை மிளகாயினுடைய விலை இவைகள் எல்லாம் குறைந்து விட்டன என்று குறை கூறிக்கொண்டேயிருக்கிறார்கள். ஆகவே, அரிசியின் விலை, பருப்பின் விலை, புளியின் விலை, மிளகாய் விலை இவைகளை எல்லாம் உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ? அல்லது விலை குறைவை ஈடு செய்வதற்கு சர்க்காரிலிருந்து ஏதாவது சப்ஸிடி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கண்ட்ரோல் என்று சொல்லும்போது விலை மேலே உயர்ந்து போகாமல் பார்த்துக் கொள்வதுபோல், விலை கீழே போய்விடாமலும் பார்த்துக்கொள்ள

வேண்டும். நியாயமான விலையில், விவசாயிகளுக்கும் உற்சாகம் குறைந்து விடாமல் இருக்கும்படியான stabilisation of prices) நிலையில் விலைகளை நிர்ணயிக்கவேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அந்த அடிப்படையில்தான் பிரைஸ் பாலிஸி நிர்ணயிக்கப்படுகிறது.

Kalingarayan channel

* 477 *Q.*—SRI K. R. NALLASIVAM : }
SRI N. K. PALANISAMI : } கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கோவை ஜில்லா ஈரோடு தாலுகாவில் மேல் காலிங்கராயன் வாய்க்கால் வெட்டுவது எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) இதன் மூலம் பயன் பெறக்கூடிய விஸ்தீரணம் எத்தனை ஏக்கர்?

(இ) இதில் முன்பே கீழ்பவானித் திட்டப் பகுதியில் சேர்ந்துள்ள நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு?

(ஈ) இதற்காகும் உத்தேச செலவு எவ்வளவு?

(உ) இவ்வாய்க்காலில் எத்தனை மாதங்கள் தண்ணீர் விடப்படும்?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The excavation of the Upper Kalingarayan Channel will be taken up after the scheme is sanctioned by Government. Plans and estimates for the scheme have been received by Government from the Chief Engineer (Irrigation) and the report of the Board of Revenue on the scheme is awaited.

(*b*) 16,000 acres of new area and 12,500 acres of existing ayacut under the Lower Bhavani Project.

· (*c*) 12,500 acres.

(*d*) Rs. 262·00 lakhs.

(*e*) For 5½ months in a year, i.e., from the 15th August to the end of January.

SRI K. R. NALLASIVAM : இந்த மூன்றுவது ஐந்தாண்டு திட்டத்திற்காக கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில் இது பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது . . .

'Drainage and seepage water entering the Bhavani river . . . என்று சொல்லப்பட்டிருக்கிறது . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது ஒன்றும் இங்கு கேட்கவில்லை.

SRI K. R. NALLASIVAM : அதாவது இந்த வாய்க்காலுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஆதாரமானது கீழ் பவானியிலிருந்து ஏற்படும் நீர் கசிவுத் தண்ணீர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நீர் கசிவு நிரந்தரமாக இருக்கும் என்று சர்க்கார் கருதுகிறதா?